**செ.வெ.எண்:46** **நாள்20.08.2019**

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் குடிமராமத்துத் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் ஜெயங்கொண்டம் வட்டம், சித்தமல்லி கிராமத்தில் நடைபெற்று வரும் குடிமராமத்துத் திட்டப்பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் நீர் ஓடையின் நீளம் 500 மீட்டர், அகலம் 60 மீட்டர் அளவுள்ள உபரி நீர் போக்கி செல்லும் நீர் ஓடையினையும், ஓடையின் இருபுறமும் சீரான இடைவெளியில் எல்லை கற்கள் நடப்படும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து, கல்லாத்தூரில் வன்னான் ஏரியில் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பில் கரை பலப்படுத்துதல், மதகுகள் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, இப்பணிகள் அனைத்தும் மழைக்காலங்களில் முன்னதாக விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை, நீ.வ.ஆ) டி.தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் சாந்தி (ஜெயங்கொண்டம்), ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் சந்தானம், ஆண்டிமடம் வட்டாட்சியர் குமரய்யா மற்றும் பாசனதாரர் சங்க உறுப்பினர்கள், விவசாயிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**